1968 பிப்ரவரி 15]

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, சிவராஜ் கம்பெனி, டி.வி.எஸ். கம்பெனிகளின் மூலமாக இனிமேல் பஸ் வாங்குவதில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பொதுக் கூட்டங்களிலும், மேடைகளிலும் பல பேர், 'அமைச்சர் சிவராஜ் கம்பெனியுடன் தொடர்பு கொண்டு பேரம்பேசி, அவர்களுடைய பஸ்களை வாங்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள்' என்று பேசிக்கொண்டு வருவதைக் குறித்து நண்பர் அவர்கள் காரணம் அறிய விரும்புகிறார் என்று கருதுகிறேன். நமக்கு நல்ல தரமான வண்டிகள் தேவை. லேலண்ட், பென்ஸ் என்ற இரண்டு வகை வண்டிகள் போதும். அவை பல ஆண்டுகளுக்கு நன்றாக உழைக்கக் கூடியவை. ஆகவேதான் லேலண்ட், பென்ஸ் இவற்றிற்கு முக்கியத் துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பர்கோ முன்பு வாங்கியிருக்க லாம். வாங்கியவரைக்கும் பர்கோ போதும். இனிமேல் புதிதாக வாங்க வேண்டாம் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

*39 வினா—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

பழனியிலிருந்து நத்தம் வழியாகத் தேவகோட்டைக்கு அரசி னரின் துரித பஸ் விடுவதற்கேற்ற செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, செட்டிநாட்டுப் பகுதி யில் இருந்து பழனிக்கு அதிக மக்களும், வணிகத் தொடர்பும் இருப்பதனால் அந்தப் பகுதியில் மிக விரைவில் செல்லக்கூடிய பேருந்து வண்டி விடுவதற்கு அரசினர் முயல்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பழனி, தேவகோட்டை ஆகிய இருமுனைகளிலும் இன்று டெப்போக்கள் இல்லாததால் உடனடியாக விடுவதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. மேலும் தற்போதுள்ள வழித்தடங்களை தேசியமாக்குவதன் காரண மாக அதிக பஸ்கள் தேவைப்படுகிற காரணத்தினால் இந்தப் புதிய ரூட் பற்றி சற்று நிதானமாக யோசிக்க வேண்டியிருக்கிறது.

திரு. பி. எஸ். மணியன்: தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து கொடைரோடு வழியாக பிற இடங்களுக்கு இன்றைக்கு அரசாங் கப் பேருந்து வண்டிகள் செல்கிறபோது இடையில் ரயில்வே கேட்டுகளில் மணிக்கணக்கில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த ரூட்டை மதுரையில் இருந்து சோழவந்தான் வழியாக கோடைரோடு சென்று பிற இடங்களுக்கு விடுவதனால் இந்தக் காலதாமதம் தவிர்க்கப்படுவதோடு மொத்த தூரத்திலும் 2½ மைல்கள் குறைவாக வரும் என்பதனால் இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது குறித்த விவரங்களை கனம் உறுப்பினர் எழுதி அனுப்பினால் இந்தத் துறையினரும், இயக்குநரும் கவனிப்பார்கள்.

Over-bridge near Kumbakonam Railway station

*40 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is a proposal to construct an over-bridge at the level-crossing on the Kumbakonam-Karaikkal road, on the eastern side of Kumbakonam Railway Station; and

(b) if so, when it will be taken up for execution?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம், அந்தச் சாலையின் மைல் 0/7-ல் மேல் பாலம் கட்டுவதற்கான திட்டம், நான்காம் ஐந்தாண்டுத் திட்டச் செயற்குறிப்புகளில் சேர்க்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) திட்டத்தில் இப்பணி சேர்க்கப்பட்ட பின்னர், வரிசை முறைப்படியும் நிதிவசதி கிடைப்பதைப் பொறுத்தும் இவ்வேலை மேற்கொள்ளப்படும்.

THIRU K. VINAYAKAM : What is the estimate for this project?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இன்னும் அதற்கான எஸ்டிமேட் தயாரிக்கப்படவில்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: சார் இப்படிப்பட்ட வேலைகளுக்கு எல்லாம் இந்திய சர்க்காரில் இருந்து பூராவும் மானியமாக வருகிறதா? அல்லது நமது சர்க்காரும் ஓரளவுக்கு அந்தச் செலவை ஒத்துக்கொள்ளவேண்டுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தேசீய நெடுஞ்சாலைகளில் இந்த வேலை அமைந்தால் அதற்காகும் செலவில் பாதியை நாம் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. பாதித்தொகையை மத்திய சர்க்கார் அளிக்கிறது.

நல்லம்பாக்கத்தில் புதிய ஏரி

*41 வினா.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா?

(அ) தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த நகர் கிராமத்தைச் சேர்ந்த நல்லம்பாக்கத்திற்கு ஓர் புதிய ஏரி கட்டிக்கொடுக்க கோரி 19—3—1966-ஆம் தேதியில் மேற்படியூர் பஞ்சாயத்து தலைவர் மூலமாக மகசர் மனு ஒன்று நீர்ப்பாசன அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?